பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4-50

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி மீ 24 உ திங்கட்கிழமை (08-07-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 215

# வன்முறையை கைவிடுவதாக அறிவித்தால் மட்டுமே பேச்சு!

## அரசின் நிலை குறித்து பிரட்மன் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 8

வருங்காலத்தில் எந்தவிதமான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதானாலும், அதற்கு முன்னர் "அரசியல் நோக்கங்களை எட்டுவதற்கு ஒரு வழி முறையாக வன்முறையைப் பயன்படுத்தமாட்டோம்'' என்று விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவிக்க வேண்டும் என ஸ்ரீலங்கா அரசு கூறியிருக்கிறது.

அரசின் இந்த நிலைப்பாட்டை ஜனாதிபதியின் வெளி விவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் நேற்று வெளிவிட்டார்.

எந்த ஒரு முன்நிபந்தனையுமின்றி பகிரங்கமான பேச்சுகளை மீண்டும் தொடருவதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைமையிடம் இருந்து தகவல்கள் வந்திருப்பதாகக் கூறப்படுவது பற்றி குறிப்பிடுகையிலேயே திரு. பிரட்மன் வீரக்கோன் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இப்பிரச்சினையில் இலங்கை அரசின் நிலையில் எந்தவித மாற்றமும் இல்லை என்றும் பேச்சுக்களுக்கு கதவுகள் திறந்தேயிருப்பதாக அரசு கூறிவந்திருக்கிறது என்றும் அவர் மேலும் சொன்னார்.

இதேவேளை—

கடந்த சனிக்கிழமை லண்டனில் செய்தி ஸ்தாபனம் ஒன்றுக்கு திரு. கிட்டு அளித்த ஒரு பேட்டியில்—

முன் நிபந்தனைகளின்றி இலங்கை அரசுடன் பேச்சுக்கள் நடத்த விடுதலைப் புலிகள் இயக்கம் எப்போதும் தயாராக இருப்பதாக கூறியிருக்கிறார். (ஒ-எ)

## நேற்று 20 முஸ்லிம்கள் கிழக்கில் சுட்டுக் கொலை

கொழும்பு, ஜூலை 8

கிழக்கு மாகாணத்தில் நேற்று 20 பேர் ஆயுதம் தாங்கிய குழு ஒன்றினால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இறந்தவர்கள் அனைவரும் முஸ்லிம்கள் என அறிவிக்கப்பட்டது.

பொலனறுவை மாவட்டத்தில் புதூர் என்ற மீன்பிடிக் கிராமத்துக்குள் நேற்று அதிகாலை நுழைந்த ஆயுதம் தாங்கிய இளைஞர்கள் குழு ஒன்று அங்கிருந்த பத்துப் பேரைச் சுட்டுக்கொன்றது.

அதன் பின்னர் அவர்கள் அங்கிருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ள கரபோவில்ல என்ற இடத்தில் மீன் பண்ணை ஒன்றுக்குச் சென்று அங்கும் 9 பேரை சுட்டுக் கொன்றனர். துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு ஆளான வேறு எட்டுப் பேரில் ஒருவர் பின்னர் இறந்தார்.

பொலனறுவை – மட்டக்களப்பு எல்லைப் பிரதேசத்தில் இராணுவத்தினர் அண்மையில் தீவிர தேடுதல் வேட்டையை மேற்கொண்டனர் என்றும் அதற்குப் பதிலடி கொடுக்கும் விதத்திலேயே இந்த அதிரடித் தாக்குதல் சம்பவங்கள் நடந்திருக்கின்றன என்றும் பாதுகாப்பு அதிகாரிகள் கூறியதாக ஆஸ்திரேலிய வானொலி தெரிவித்தது. (அ)

### கொழும்பு நகரப் பகுதியில்

## வீடுகளில் தங்கியிருக்கும் இளம் வயதினரும் கைது!

கொழும்பு, ஜூலை 8

கொழும்பில் தனியார் வீடுகள், ''போடிங்''குகளில் தங்கியுள்ள தமிழர்கள் மீது பொலிஸாரின் கவனம் திரும்பியுள்ளது

நாரஹேன்பிட்டி, கொட்டாஞ்சேனை, வெள்ளவத்தை. தெகிவளைப் பகுதிகளில் உள்ள தனியார் வீடுகள், 'போடிங்'குகளில் தங்கியுள்ள இளம் வயதினர் கடந்தவாரம் பொலிஸாரால் பெரும் எண்ணிக்கையில் கைதுசெய்யப்பட்டனர்.

200 க்கு மேற்பட்டவர்கள் கைதுசெய்யப்பட்டு அந்தந்தப் பகுதி பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

இதேவேளை, செட்டித் தெருவில் கடந்த வாரம் கைது செய்யப்பட்ட 100 பேரில் கணிசமானோர் 5 நாட்களின் பின்னர் விடுவிக்கப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-3)

## தனியார் லொறிகளுக்கு அ'புரத்திலேயே 'பர்மிட்'!

யாழ்ப்பாணம், ஜூலை 8

தனியார் லொறி உரிமையாளர்கள் வடக்கே பொருள்களை எடுத்து வருவதற்கு தற்பொழுது அனுராதபுரத்தில் வைத்தே 'பர்மிட்' பெற வேண்டியுள்ளது.

அண்மையில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்தே கொழும்பில் கூட்டுப்படை தலைமையகத்தால் தனியாருக்கு வழங்கப்பட்டு வந்த 'பர்மிட்' நடைமுறை நிறுத்தப்பட்டுள்ளது.

இங்கிருந்து செல்லும் வேளை அனுராதபுரத்தில் 'பர்மிட்' எடுக்கப்படும்போது அனுமதிக்கப்படும் பொருள்களில் சில, கொழும்பில் இருந்து வவுனியாவுக்கு திரும்பி வரும்போது தடை செய்யப்பட்ட பொருள்களாகக் கணிக்கப்படுகின்றன.

இதனால் அந்தப் பொருள்களை திரும்பவும் கொழும்புக்கு அனுப்ப வேண்டிய நிலை ஏற்படுகிறது. இந்தக் காரணத்தினால் பெரும் செலவும், வீணான கால விரயமும் ஏற்படுகின்றன என்று சம்பந்தப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர். (ஒ-3)

### மந்திகை வைத்தியசாலைக்கு

## பிரெஞ்சு வைத்திய குழுவின் விசேட சத்திர சிகிச்சை பிரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 8

மந்திகை வைத்தியசாலைக்கு பிரெஞ்சு வைத்தியக் குழுவின் விசேட சத்திர சிகிச்சைப் பிரிவு ஒன்று இம்மாதம் வர இருக்கிறது.

தாண்டிக்குளம் தாக்குதலை அடுத்து வடக்கு-கிழக்கிலிருந்து வாபஸ் பெறப்பட்ட இக் குழுப் பிரதிநிதிகள் மந்திகை தவிர்ந்த ஏனைய ஆஸ்பத்திரிகளுக்கு சேவையாற்ற ஏற்கனவே வந்து சேர்ந்துள்ளனர்

மந்திகைக்கான வைத்தியர்கள் அடுத்த வாரமளவில் அங்கு வந்து சேருவர் என்றும் அதனைத் தொடர்ந்து சத்திர சிகிச்சைப் பிரிவும் வரும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (த-3)

## முச்சந்தி முரளி



உது... பனையிலை தேள் ஓட்ட தென்னையிலை நெறி கட்டின கதை மாதிரி எல்லோ கிடக்கு......:

## தவில் மேதை சின்னராசா காலமானார்

ஈழத்தின் தலைசிறந்த தவில மேதைகளில் ஒருவரான ''லயஞான விவகார பூபதி'' இணுவையூர் என். ஆர். சின்னராசா தமது 61 ஆவது வயதில் காலமானார்.

நோய்வாய்ப்பட்டிருந்த அவர் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு நேற்று முன் தினம் இரவு மரணமானார்.

ஈழத்தின் மூத்த கலைஞரான திரு சின்னராசா இலங்கையில் மட்டுமன்றி, தமிழகம், மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் பல கச்சேரிகளை நடத்தி புகழ் பெற்றவர்.

பல வித்துவான்களின்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## பாணில் 'பற்றரி'கள்! இளம் பெண் பிடிபட்டார்!!

பாணில் 'டோர்ச் பற்றரி'கள் இரண்டை மறைத்து வைத்து கொண்டுவர முயன்ற இளம் பெண் ஒருவர் படையினரிடம் அகப்பட்டுக் கொண்டார்.

நேற்று முன்தினம் வவுனியாவில் யாழ். நோக்கி வரும் பயணிகளைச் சோதனையிடும் போதே இந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

'பற்றரி'களைப் பறித்தெடுத்த படையினர், சம்பந்தப்பட்ட பெண்ணை பின்னர் விடுவித்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது

இந்தச் சம்பவத்தின் பின்னர் படையினரின் சோதனை நடவடிக்கை மிக நுணுக்கமாக நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

அன்றைய தினம் வெள்ளித் தகடுகளை இடுப்பில் கட்டிக் கொண்டுவந்த ஒருவரும் படையினரிடம் அகப்பட்டுக்கொண்டார் என்றும்—

அவரை படையினர் தடுத்து வைத்திருந்தனர் என்றும் தெரியவந்தது. (ஒ.3)

## சந்திரசேகரன் கைது: சிறிமாவுக்குச் சிக்கல்!

கொழும்பு, ஜூலை 8

கொழும்பு கூட்டுப்படைத் தலைமையக குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பி. சந்திரசேகரன் கைது செய்யப்பட்டிருப்பது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைவியும் எதிர்க்கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கும் எதிர்க்கட்சி அணிகளுக்கும் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியிருப்பதாக கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

குண்டுவெடிப்புச் சூத்திரதாரியான வரதன் தலவாக்கொல்லை கொட்டகலையில் ஒளித்திருக்க உதவினார் என்ற சந்தேகத்தின் பேரிலேயே திரு. சந்திரசேகரன் கைதுசெய்யப்பட்டதாக அறி

(4 ஆம் பக்கம் பார்க்க)

### கொழும்பில் கொள்ளை:

## மட்டுநகரைச் சேர்ந்த 3 தமிழ் இளைஞர்கள் கைது

கொழும்பு, ஜூலை 8

வெள்ளவத்தை ஹமில்டன் பிளேஸில் உள்ள வீடொன்றில் கடந்த வெள்ளி இரவு பணம் உட்பட இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்ளையடித்த நான்கு பேரை பொலிஸார் கைது செய்தனர்,

கைதான நால்வரில் மூவர் மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் என்றும் மற்றைய நபர் சிங்களவர் என்றும் தெரியவருகிறது.

கைதான சிங்கள இளைஞர் எதிரணி அரசியல் கட்சியைச் சேர்ந்த பிரபல பிரமுகர் ஒருவரின் உறவினரென்றும்—

அந்தப் பிரமுகரின் பாதுகாப்பிற்கு வழங்கப்பட்ட துப்பாக்கிகளே இக்கொள்ளைக்குப் பயன்படுத்தப்பட்டன

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஆற்றல் மிக்க சக்தி வாய்ந்த நுரைவளம் கூடிய ''மில்க் வைற் சலவைத்தூள்'' 50 கிறாம் பக்கெற் ரூ. 6/- மட்டுமே. 100 வெற்றுப் பக்கெற் அனுப்பி ஒரு அழகிய லேஞ்சி அன்பளிப்பாசப் பெறுங்கள். மில்க்வைற், யாழ்ப்பாணம். (சி/0224)

புதிரைப் பலகை குத்துக் கால் விற்பனைக்கு உண்டு. தொடர்பு 26/14 தவராசா வீதி, (வளாக ஒழுங்கை) திருநெல்வேலி. (17420)

### தேவை

முதலாம் ஆண்டு தொடக்கம் ஐந்தாம் ஆண்டு வரை எட்டுப் பிள்ளைகளுக்கு கிழமை நாட்களில் மட்டும் கற்பிக்க தகைமையுடைய ஆசிரியர் தேவை. இல. 118, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (4189)

### பைன்டிங்

உங்களது பெறுமதிமிக்க புத்தகங்கள் மற்றும் தொகுப்புகள் அனைத்தும் மிகவும் அழகான முறையில் கட்டிக் கொடுக்கப்படும். கூடுதலாகக் கட்டும் நூலசம், கல்லூரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். பூபாலசிங்கம் புத்தகசாலை, 255, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி/0199)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், பீனிசம், தலையிடி, தலைகாலவியல்! சூதகக்குத்து, சரும நோய்கள் மற்றும் சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம், 121, 2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (4170)

## மெய்வல்லுநர் போட்டி

அச்சுவேலி, ஜூலை 8

மருதனார்மடம் கோட்டக் கல்வி அலுவலகப் பிராந்தியத்தில் உள்ள பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டி இன்று 8 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும். [த-11]

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 8

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினருக்கும், வட பிராந்திய வர்த்தக ஊழியர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் இடம்பெற்றது.

வி. பு. மக்கள் முன்னணியின் சார்பில் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இராஜன், யாழ். மாவட்ட உதவிப் பொறுப்பாளர் திரு. கஸ்ரோ, யாழ். தொழிற் சங்கப் பொறுப்பாளர் திரு. ரவி ஆகியோர் கலந்து கொண்டனர். (த)

## பஸ் சேவைகள் தனியார் வசம்

கொழும்பு, ஜூலை 8

நாட்டின் பஸ் சேவைகள் அனைத்தும் முற்றாகத் தனியார் துறைக்கு வழங்கப்படவிருக்கின்றன.

இது தொடர்பாக அரசுக்கு ஆலோசனை வழங்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படவிருக்கிறது.

இதற்கான சட்ட மூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. (த-எ)


## சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி - 1991

மேற்படி பயிற்சி நெறி எமது பயிற்சி நிலையத்தில் ஆகஸ்ட் மாதம் 1ஆம் திகதி ஆரம்பமாகும்

பயிற்சி பெற விரும்புவோர்;

ஜூலை 27ஆம் திகதிக்கு முன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

மேலதிக விவரங்களை பயிற்சி நிலையத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

— இயக்குனர்.

சிறுவர் பாடசாலை,
ஆசிரியர் பயிற்சி நிலையம்,
மூளாய், சுழிபுரம்.
03-07-1991 (17394)

வட பிராந்திய சிகை அலங்கரிப்பாளர் யாழ். கிளைச் சங்க

## பொதுக் கூட்டம்

இல: 1083, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்,
முகவரியில் அமைந்திருக்கும் சங்க அலுவலகத்தில்
10 - 07 - 1991 புதன்கிழமை
காலை 9- 00 மணிக்கு நடைபெறும்.

புதிய நிர்வாகிகள் தெரிவு நடைபெற இருப்பதால் யாழ். கிளை (1) ஒன்றுக்கு உட்பட்ட சிகை அலங்கரிபபுத் தொழில் செய்யும் அனைத்துப் பிரிவினரும் அழைக்கப்படுகின்றனர்.

கூட்டத்திற்கு சமுகம் அளிக்காதவர்கள் தகுந்த காரணம் காட்ட நேரிடும்.

சமாசத்துக்கு கிளைச் சங்கங்களில் இருந்து மும் மூன்று உறுப்பினர்கள் பதிவு செய்யப்படுவதற்கும் இறுதிநாள் அன்றாகும் என்பதை இணைச் சங்கங்களுக்கு அறியத் தருகின்றோம்.

தலைவர்: அ. அல்பேட்.
செயலாளர்; வே. தியாகராசா.
(சி-0227)

## பதவி வெற்றிடம்

### முகாமையாளர் / கணக்காளர்

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலய பரிபாலன சபையின் நிர்வாகத்தின் கீழ் பணியாற்றுவதற்கு முகாமையாளர்/கணக்காளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆலயத்திற்கு அண்மையில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

இது மிகவும் பொறுப்பான ஓர் பதவி, சேவை, தொண்டு, மனப்பான்மையுள்ளோர் 15-07-1991ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்களை ஆலய முன் கதவில் தொங்கவிடப்பட்டுள்ள தபால் பெட்டிக்குள் போடவும்.

சம்பளம் பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம்.

தலைவர்,
சட்டநாதர் ஆலய பரிபாலனசபை.
[17419]

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 03 — 01 — 1929



மறைவு: 08 — 07 — 1990

அமரர்

### நாகலிங்கம் தேவபாலசுந்தரம்

[இளைப்பாறிய விளையாட்டு அதிகாரி]

அப்பா! எம்முள்ளத்தில் நீங்காது நிறைந்திருக்கும் நிழலுருவே
வானுயர நின் ஆத்மா சாந்தி பெற இறைவனை இறைஞ்சுகிறோம்.

அன்பு மனைவி, மகன்.

தேவஸ்தான், கைதடி. ([illegible])

வெளிவந்து - விற்பனையாகின்றது!

## ஆங்கில உதவி ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி

## "ENGLISH TEACHERS EXAM GUIDE"

(நடைபெற்ற 5வருட மாதிரி வினா-விடைகளுடன் 15 கட்டுரைகளும், கடிதங்களும்)

அஸ்ரன் வெளியீடு - விலை 7½/-

[எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்]
[சி-0196]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 05 — 02 — 1927



மறைவு: 08 — 06 — 1991

நெடுந்தீவு மேற்கு

அமரர்

### அம்பலவாணர் கணபதிப்பிள்ளை

[உரிமையாளர்; கணேசானந்தாஸ் - சில்க் பலஸ், யாழ்ப்பாணம்]

தங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று கொக்குவிலில் உள்ள எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வைத்திலிங்கம் - சேதீஸ்வரி,
பராசக்தி - தனிநாயகம்,
நவயோகம் - நரேந்திரன்,
தங்கமுத்து - லோகராசா (லண்டன்)

நா. இராமச்சந்திரன்,
72/6, பிரம்படி லேன்,
கொக்குவில் கிழக்கு. [17415]

## ஓராண்டு நினைவஞ்சலி



செல்வன்

### தர்மதுரை அசோக்குமார்

(உயர் கல்லூரி பொறியியல்துறை மாணவன், நோர்வே)

தோற்றம்: 17 - 11 - 1967
மறைவு: 14 - 07 - 1990

திதி: 08 — 07 — 1991

எமது செல்வமே! அசோவே! நீர் எங்களைப் பிரிந்து ஆண்டு ஒன்று சென்றாலும் எமக்கு இது ஒரு கனவுதான். உமது செல்லப் பேச்சும், சிரிப்பும், அம்மா என்ற அன்புக் குரலும் எங்கள் உள்ளங்களில் நிறைந்து நிலையாகி விட்டது. உமது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்:
அம்மா, அக்காமார், அண்ணா,
மைத்துனர்மார், மருமகன்.

திருமதி தர்மதுரை,
ஐலன்ட் லொட்ஜ்,
முள்ளானை, இளவாலை. [17422]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### களைதல் அவசியம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் மீண்டும் மக்களுக்கு எட்டாதவையாக உயர்ந்துவிட்டன. இந் நிலை பட்டினிச் சாவுகளைத் தோற்றுவிக்கலாம்.

யுத்தம் தொடங்கி ஓர் ஆண்டு உருண்டோடி விட்டது. குறிப்பிட்ட ஓராண்டுப் பகுதியின் இரண்டாம் காலாண்டிலும். மூன்றாம் காலாண்டின் முற்பகுதியிலும் பெரும் உணவு நெருக்கடியையும், ஏனைய பாவனைப் பொருள் தட்டுப்பாட்டையும் மக்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

எனினும் மூன்றாம் காலாண்டின் பிற்பகுதியிலும், நான்காம் காலாண்டிலும் நிலைமை பெரிதும் சீர்திருந்தியது. நாளுக்கொரு விலை, பொழுதுக்கு ஒரு விலை என்ற நிலை மாறி ஒரு வாரத்துக்கேனும் சராசரி விலைக்குப் பொருள்களை மக்கள் வாங்கக் கூடியதாக இருந்தது.

அவ்வாறு கூறும்போது, அரசாங்கம் தனது கெடுபிடிகளை, கட்டுப்பாடுகளை தளர்த்தியதன் விளைவாக ஏதோ தட்டுப்பாடு நீங்கி இருந்தது என்பது அர்த்தமல்ல, வர்த்தகம் ஓரளவு ஒழுங்கு சீர்படுத்தப்பட்டமை, மாற்று உணவுப் பொருள்கள் பாவனைப் பொருள்கள் பாவனைக்கு வந்தமை, நிலைமைக்கு ஈடுகொடுத்துத் தங்கள் பழக்கத்துக்கு உரியனவாகிவிட்டவற்றை மக்கள் மாற்றிக்கொண்டமை என்பனவே நிலைமை சீர்திருந்தியமைக்குக் காரணங்களாகும்.

ஆனால் இப்போது மீண்டும் இரண்டாம் காலாண்டில் ஏற்பட்டது போன்ற ஒரு ஆபத்தான நிலை தோன்றியுள்ளது.

கண்ட கண்ட வதந்திகள் பரப்பப்படுகின்றன. அவை முழுக்க முழுக்க வர்த்தக ஆதாயங்களை நோக்கமாகக் கொண்டவை, சந்தையில் இருக்கும் பொருள்கள் மக்கள் நலன் பேணப்படாமல் பதுக்கப்படுகின்றன. பல்வேறு காரணங்களைக் கூறி விலைகள் உயர்த்தப்படுகின்றன. இதுவே இன்றைய நிலை.

மக்கள் நலனுக்கு மேலாக வர்த்தக நலன் — ஆதாயம் —என்ற பெரும் சமூகக் கொல்லி மீண்டும் தலை எடுத்துள்ளது. அதனை வெட்டித் தறிக்காவிடில் எங்கள் இனம் தானாகவே மாளும்.

ஆம். எதிரி ஆயுதப் போரினாலும், உளவியற் போரினாலும் தமிழர்களைக் கொல்வதற்கு முன்னர், தமிழர்களிடையே பரவிவரும் வர்த்தக ஆதிக்கம்-வியாபார ஆதாயம்-என்ற சமூகக் கொல்லியே அவர்களை முற்றாக அழித்துவிடும் ஆபத்து நிலை உருவாகி வருகிறது.

இது களைந்து எறியப்பட்டாக வேண்டும். போராட்டச் சூழ்நிலை — நெருக்கடி நிறைந்த சூழ்நிலை — எப்போது நீங்கும் என்று கால வரையறை எதுவும் சொல்ல முடியாது.

எனவே வர்த்தக ஆதிக்கம்-நலனும், மக்கள் நலனை, அவர்கள் வாழ்வை, ஏப்பம் விடுவதற்கு அனுமதிக்காத வகையில், பின்னணிக்குப் பொருத்தமான வர்த்தக—சந்தைப்படுத்தல் — விற்பனை முறை ஒன்று வகுக்கப்பட்டு அது கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

தமிழ்ச் சமூகத்தில் தாங்களும் ஓர் அங்கமே என்று உணர்ந்து, தமிழ் வர்த்தகர்கள் தங்கள் ஒத்துழைப்பை நல்குவது அவசியம். தமிழ் மக்கள் அழியும்போது தாம் மட்டும் தப்பிப் பிழைக்கலாம் என்று அவர்கள் தப்புக் கணக்குப் போடமாட்டார்கள் என நம்புவோமாக.

# மொழி காக்கும் போரிலே மக்களை இணைக்க வேண்டும்

## தமிழ்வள ஆய்வுக் கருத்தரங்கில் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 8

தமிழ் மொழியில் புகுந்து கலந்துள்ள பிறமொழிச் சொற்களை ஆய்ந்து களைவது —

மறைக்கப்பட்ட பழந் தமிழ்ச் சொற்களை மீட்டு வெளிக்கொணர்வது —

அறிவியற் சொற்களைப் புதிதாக உருவாக்குவது—

இவற்றை நோக்கமாகக் கொண்ட தமிழ்மொழி பாதுகாப்பு அமைப்பை நாம் ஏற்படுத்தி உள்ளோம்.

இந்த மொழிக் காப்புப் போரிலே ஈடுபடுபவர்கள் ஆயுதம் ஏந்தவேண்டிய தேவையில்லை. இந்த அமைப்பின் மூன்று எண்ணங்களையும், செயற்பாடுகளையும் மக்களிடம் எடுத்துச் சென்று மக்களையும் இந்த அமைப்பில் இணைத்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. பேபி சுப்பிரமணியம், நேற்று யாழ், பல்கலைக் கழகத்தில் நடந்த தமிழ்வள ஆய்வுக் கருத்தரங்கில்கலந்துகொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி இ. பாலசுந்தரம் தலைமையில் நடந்த இந்த ஆய்வரங்கில் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், கல்விப் பகுதி அதிகாரிகள், ஆசிரியர்கள், தமிழ்ப்புலமையும் அபிமானமும் நிறைந்த முன்னாள் ஆசிரியர்கள் பெருந்திரளாகச் சமுகமளித்திருந்தனர்.

திரு. பேபி சுப்பிரமணியம் தமது பேச்சில் மேலும் தெரிவித்ததாவது:—

தமிழின விடுதலை என்பது மொழி, நாடு, இனம் ஆகிய மூன்று விடுதலைகளும் அடங்கியதுதான். எனவே மாற்றான் தளையினின்றும் எமது நாடு, இனம் விடுதலை அடையும்போது, எமது அன்னைத் தமிழ் மொழியும் வேற்று மொழி ஊடுருவல்கள் திணிப்புக்களிலிருந்து விடுதலை பெற்றாகவேண்டும்.

### தமிழ்மொழி காப்பதில் புலிகள்

அதனால்தான், இழந்த நாட்டை மீட்டு எதிரிகளின் தாக்குதல்களை வெற்றிகொள்வதற்காக களம் அமைத்துப் போராடுகின்ற தமிழீழ விடுதலைப் புலிகள்—

தமிழ்மொழியைக் காப்பதற்கும் களம் அமைத்திருக்கிறார்கள்.

தமிழகத்தில் ஆறு கோடி மக்கள் வாழ்ந்தும் முடியாத காரியத்தை நாம் செய்ய இயலுமா என்ற ஐயப்பாடு சிலருக்கு எழலாம். ஆறு கோடி தமிழர்கள் தமது விடுதலைக்குப் போராடாத போது, எம்மால் போராட முடியுமா என்று நாம் வாளா விருந்துவிடவில்லை

### வெற்றிபெறுவோம் என்பது உறுதி

அது போலவே, தமிழியக்கம் தமிழகத்தில் முழு வெற்றி பெறாதபோதிலும் நாம் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையும் உறுதியும் எம்மிடம் உண்டு. தமிழகத்தைச் சேர்ந்த தமிழறிஞர்களின் உதவியையும் பெற்று இந்த முயற்சியில் நாம் வெற்றி பெறுவோம்.

உலகில் உள்ள வேற்று மொழியாளர்கள் எல்லாம், திருக்குறளைத் தத்தம்மொழிகளுக்கு மொழி மாற்றம் செய்து பயன்படுத்தி வருகின்றபோதிலும் எமது தமிழ் மாணவருக்குப் போதிய அளவில் திருக்குறள் சொல்லிக் கொடுக்கப்படுவதில்லை. எமது மாணவர்கள் திருக்குறளின் நற்பயனை முழுமையாகப் பெற வழிவகை செய்ய வேண்டும்.

தமிழின் மேன்மைகளை, மாட்சியை விளக்குகின்ற சங்க இலக்கியங்கள், வடமொழிச் சொற்கள் அருகிய தூய தமிழ்ச் சொற்கள் அடங்கிய இலக்கியங்கள் பாடத் திட்டத்தில் இடம்பெறவேண்டும்.

இப்போதுள்ள பாடநூல்களில் உள்ள குறைபாடுகளை நீக்கும் விதத்தில், தமிழ்மாணவர்களுக்குத் தேவையானவற்றை உள்ளடக்கும் வகையில், ஒவ்வொரு ஆண்டுப் பாடத்திட்டத்திற்கும் துணைப் பாட நூல்களை நாமே ஆக்கவேண்டும்.

### திட்டங்கள் தீட்டப்பட வேண்டும்

அவற்றை மாணவர்களுக்குப் பெருமளவில் கிடைக்கக் கூடியதாக அச்சேற்ற முடியாவிட்டாலும் கூட, அவற்றை ஆசிரியர்களின கை நூல்களாக, வழிகாட்டி நூல்களாக அமைத்து இன்றைய மாணவர்களைச் சிறந்த சமுதாய சிற்பிகளாக உருவாக்க வேண்டியது அவசியம்.

இன்றைய பாடத்திட்டங்களில் தமிழ் மாணவருக்கு வேண்டிய ஒழுக்க நெறிகள், அறநெறிகள், மொழிப்பற்று, நாட்டுப் பற்று, அறிவியல் சிந்தனைகள், தன்னலமற்ற தியாக உணர்வு, வீரம், தன்னம்பிக்கை என்பன வேண்டிய அளவுக்குக் கூறப்படவில்லை. அவற்றை எவ்வாறு பாடத்திட்டங்களில் புகுத்துவது என்பது குறித்தும் திட்டங்கள் தீட்டப்பட வேண்டும் என்று அவர் சொன்னார்.

அரசாங்கம் வெளியிட்டிருக்கும் பாடநூல்களில் உள்ள குறைபாடுகள், அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகள் எனபன குறித்து—

கலைப்பீடாதிபதி பேராசிரியர் பி. பாலசுந்தரம் பிள்ளை, கல்வித்துறைத் தலைவர் பேராசிரியர் வி. ஆறுமுகம், கலாநிதி சு. சுஜீந்திரராஜா, கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம், கல்விப் பகுதி முகாமைத்துவத்துறை அதிகாரி திரு. தணிகாசலம்பிள்ளை, விடுதலைப் புலிகள் கல்விப் பிரிவுப்பொறுப்பாளர் அருண் மாஸ்டர் ஆகியோரும் கருத்துரை வழங்கினர்.

கூட்டத்திற்குச் சமுகமளித்திருந்த விரிவுரையாளர்கள், ஆசிரியர்களும் தங்கள் கருத்துக்களை முன் வைத்தனர். (அ)

## மைக்கல் ஸ்டிக் விம்பிள்டன் சாம்பியன்

விம்பிள்டன், ஜூலை 8

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் ஆண்களுக்கான ஒற்றையர் இறுதியாட்டத்தில் ஜேர்மன் வீரரான மைக்சல் ஸ்டிக் எதிர்பாராத வகையில் வெற்றியீட்டி டென்னிஸ் உலகை ஆச்சரியத்தில் ஆழ்த்தினார்.

நேற்று லண்டன் விம்பிள்டன் ஆடுகளத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் முன்னணி ஆட்டக்காரரான பொரிஸ் பெக்கரை அவர் 3-0 என்ற செட் கணக்கில் தோற்கடித்து புதிய விம்பிள்டன் ''சாம்பியன்'' ஆனார்.

நேற்றைய ஆட்டத்தில் தோல்வியுற்ற பொறிஸ் பெக்சர் உலக டென்னிஸ் வீரர்கள் வரிசையில் 2 ஆம் இடத்திலும் வெற்றிபெற்ற ஸ்டிக் 6 ஆம் இடத்திலும் கணிக்கப்பட்டிருந்தனர்.

பெண்களுக்கான ஒற்றையர் விம்பிள்டன் சாம்பியன் பட்டத்தையும் ஜேர்மன் வீராங்கனையே (ஸ்ரெபி கிராப்) இம்முறை சுவீகரித்துக் கொண்டார் என்பது தெரிந்ததே. (உ)

### உண்ணாவிரதம் இருந்துவந்த

## இராம்தாஸ் பலவந்தமாக ஆஸ்பத்திரியில் அனுமதி

சென்னை, ஜூலை 8

காலவரையறையற்ற உண்ணாவிரதமிருந்து வந்த பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் இராம்தாஸ் நேற்று மாலை பொலீஸாரால் பலவந்தமாக — சிகிச்சைக்காக — சென்னை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். தற்போது அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

டாக்டர இராம்தாஸை பொலீஸார் கைது செய்திருக்கின்றனர் என்று பாட்டாளி மக்கள் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

இராம்தாஸை பொலீஸார் பலவந்தமாக கூட்டிச்செல்ல முயற்சித்தபோது அதனை கட்சித் தொண்டர்கள் தடுத்தனர். பொலீஸார் மீது கல்லெறியும் இடம்பெற்றது. அதில் பத்துப் பொலீஸார் காயமடைந்தனர்.

இதனிடையில் மாநிலத்தின் சில பகுதிகளில் பஸ்கள் சில எரிக்கப்பட்டன. மின்சார ரயில் ஒன்றுக்குத் தீவைக்கப்பட்டது. [ஒ-எ]

## காரை. அகதிகள் நலன் கருதி விசேட அமைப்பு தெரிவு

காரைநகர் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள் நலன்களைக் கவனிப்பதற்கென அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

நல்லை ஆதீனத்தில் நேற்று மாலை நடைபெற்ற இடம்பெயர்ந்தோர் கூட்டத்தில் இந்த அமைப்புத் தோற்றுவிக்கப்பட்டது. ஏராளமான மக்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இடம்பெயர்ந்துள்ளவர்களின் நலன்களைக் குறித்தும், உள்ளே சிக்கியுள்ளவர்களின் நிலைமை குறித்தும் அரசு அதிகாரிகளுடனும், சமூக அமைப்பு அதிகாரிகளுடனும் இந்த அமைப்பு பேச்சுக்களை நடத்த இருக்கிறது.

இந்த அமைப்பு உடனடியாக செயற்படும் என்றும் அதற்கென ஏழு பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## காலக்கெடு முடிந்ததும் வீடு வீடாகக் தேடுதலாம்

மேல் மாகாணத்தில் தற்தாலிகமாக வசிப்போர் பதிவு செய்வதற்கான காலக்கெடு முடிவடைந்த பின்னர், வீடு வீடாக தேடுதல் நடத்தும் நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொள்வர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வாகனங்களும் மறிக்கப்பட்டு சோதனையிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தேடுதல் நடவடிக்கைகளின்போது அலட்சியமாகச் செயற்படும் பொலிஸார் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க செய்தியாளரிடம் கூறினார். [க-எரி]

## ஒட்சிசன் சிலிண்டருக்கு தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 8

வவுனியா அரசினர் வைத்தியசாலையில் ஒட்சிசன் சிலிண்டர்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு நோயாளர்கள் எடுத்துச் செல்லப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

போதிய ஒட்சிசன் சிலிண்டர்களை அனுப்புமாறு சுகாதார அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த- 3)

## தவில் மேதை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

குருவாக விளங்கிய தவில் மேதை என். ஆர். சின்னராசா ஈழக் கலைஞர்களின் பெருமையை நிலைநாட்டியவர்.

அன்னாரின் பூதவுடல் இணுவிலில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டது. ஏராளமான கலைஞர்களும் அபிமானிகளும் அவருக்கு அஞ்சலி செலுத்தினர். (அ-3)

## குதூகலம் பொங்கிப்பரவ நிகழ்ந்த பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 8

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் பதினொராவது பட்டமளிப்பு விழா நேற்று முன்தினம் வெகு சிறப்பாக நடந்தேறியது.

இரு நேர அமர்வுகளுடன், பல்கலைக்கழக மரபு நெறிகளுக்கு ஏற்பவும், வரன்முறைகளை வழுவாது கடைப்பிடித்தும் விழா நடத்தப்பட்டது. பட்டமளிப்பு விழாவுக்கு துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசாவே தலைமை வகித்து, பட்டதாரிகளுக்குப் பட்டங்களை வழங்கியும், பதக்கங்களை அணிவித்தும் கௌரவித்தார்.

அறுநூற்றுக்கும் மேற்பட்ட பட்டதாரிகளும், அவர்களின் பெற்றோர்களும் கைலாசபதி அரங்கு நிரம்பி வழிய அணி சேர்ந்தனர். பட்டம் பெற்றவர்களை வாழ்த்த வந்திருந்த உறவினர்களும், நண்பர்களும் பல்கலைக்கழக வளவு முழுவதையும் நிரப்பினர். எங்கும் ஒரே குதூகலமும், மகிழ்ச்சியும் ரம்மியமும் பொங்கிப் பரவி இருந்ததைக் காண மனதுக்கு இதமாக இருந்தது.

பட்டம் பெற்றவர்களில் பெரும்பான்மையினர் பெண்கள் என்பதும், மருத்துவத் துறையில் பட்டம் பெற்றவர்களில் பெரும் விழுக்காட்டினர் [கொழும்பு சென்றதால் போலும்] பட்டம் வாங்குவதற்குச் சமுகமளிக்கவில்லை என்பதும், வெளிமாவட்ட மாணவர்களில் பலரும் அவ்வாறே சமுகமளிக்கவில்லை என்பதும் [illegible] கண. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தங்கம்மா நாகரத்தினம்

சரவணை கிழக்கு வேலணையைச் சேர்ந்த திருமதி தங்கம்மா நாகரத்தினம் அவர்கள் 7-7-1991 ஞாயிற்றுக்கிழமை காலை சிவபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற திரு. வேதவனம் நாகரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி மங்கையர்க்கரசி பரமநாதன், திரு. சங்கரலிங்கம் [பொறியியலாளர் அவுஸ்திரேலியா], திரு. சிவஞானம் [ஓய்வு பெற்ற ஆசிரியர் யா/வைத்தீஸ்வரா வித்தியாலயம்] திரு. மகேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு இ. பரமநாதன், திருமதி உலகநாயகி சங்கரலிங்கம் [அவுஸ்திரேலியா], திருமதி விமலாதேவி சிவஞானம் [ஆசிரியை, யா/வேம்படி மகளிர் கல்லூரி], திருமதி லோகேஸ்வரி, மகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற இராஜேந்திரன், சகுந்தலா, வசுந்தரா, கோதை, மோகனகுமரன், சாயினி, சோபினி, அச்சுதன், மதிவதனி, வாகீசா ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று 8-7-1991 திங்கட்கிழமை 54, வேம்படி வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று, காலை 10-00 மணிக்கு செல்லூன்றி மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

வே. நா. சிவஞானம்

[17424]

## திரு. பொன்னம்பலம் இராசையா

(செயலாளர்: கட்டுடை அரசடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபை)

கட்டுடை மானிப்பாயைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர் பொன். இராசையா அவர்கள் (07-07-91) நேற்றுக் காலமானார்.

அன்னார் ஈஸ்வரியின் அன்புக் கணவரும், தர்மசோதி, குமாரகுலசிங்கம் (Draughtsman) சிவஞானசுந்தரம் (France), சிவஞானவல்லி (ஆசிரியை, கட்டுடை சைவவித்தியாசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுப்பிரமணியம், வசந்தபொன்மலர், செல்வராணி, ஆகியோரின் அன்பு மாமனாரும், தாட்சாயினி பிரணாயினி, பிரணவன், சிந்திஜா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (08-07-91) இன்று காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

கட்டுடை. திசைவீரசிங்கம் (ஆசிரியர்) சிவனடியான்.

(17261)

## திருமதி தங்கரட்ணம் கனகசுந்தரம்

திருமதி தங்கரட்ணம் கனகசுந்தரம் அவர்கள் காலமானார். இவர் திரு. வே. கனகசுந்தரம் (சங்கீத பூஷணம்), அவர்களுடைய அன்பு மனைவியும், காலஞ்சென்ற சபாரத்தினம் (புகையிரத அதிபர்) அவர்களுடைய மகளும், திருமதி கந்தையா மகேஸ்வரி, திரு கந்தசாமி, திரு. முருகேசபிள்ளை அவர்களின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (8 - 7 - 91) காலை 10.00 மணிக்கு கொக்குவில் பிரம்படி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:

பிரம்படி, கொக்குவில். வே, கனகசுந்தரம் (கணவர்)

(17425)

## திருமதி கௌரியம்மா சோமசுந்தரம்

திருமதி கௌரியம்மா சோமசுந்தரம் இறைவனடி சேர்ந்தார். இவர் காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும், நேத்திராம்பாள், பாஸ்கரன் (டோகா). சிவகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. க. முருகையா, பா. வடிவழகி (மஞ்சு). அதி ஜெயரஞ்சினி (வெற்றி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (8-7-91) 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:

மஞ்சத்தடி, இணுவில். சோ, சிவகரன்

(17260)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன [பிறை-வேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 8 - 07 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

## வெடி விபத்தில் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 8

நேற்று தவறுதலாக நடந்த வெடி விபத்தொன்றில் விடுதலைப்புலிகள் இயக்கப் போராளியான பரணி (நாகரத்தினம் பரமராஜா 2 ஆம் வட்டாரம், முள்ளியவளை) மரணமானார்.

(ஓ-3)

## ஈராக் "ஸ்கட்" ஏவுகணைகள் அழிப்பு

பக்தாத், ஜூலை 8

ஈராக்கின் வடபகுதிப் பாலைவனத்தில் வைத்து 'ஸ்கட்'கள் உட்பட 61 ஏவுகணைகள்-ஐ. நா. மேற்பார்வையில் அழிக்கப்பட்டன.

ஈராக்கின் ஏவுகணைத் திறனை அழிக்க வேண்டும் என்று ஐ. நாவின் வளைகுடா யுத்தநிறுத்த நிபந்தனையின் ஓர் அம்சமாக இந்த ஏவுகணை அழிப்பு இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

(ஓ-எ)

## ஆசீர்வாதப்பர் திருவிழா

நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் திருவிழா எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறும். அன்று காலை 6. 30 மணிக்கு யாழ். ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையினால் கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

புதன்கிழமை நற்கருணை பவனி இடம்பெறும்.

## சந்திரசேகரன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்பட்டது.

திரு. சந்திரசேகரன் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் முக்கிய அரசியல் கூட்டாளியாவார். இவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து மண்வெட்டி சின்னத்தில் அம்பகமுவ, நுவரெலியா, லிந்துல - தலவாக்கொல்லை ஆகிய பிரதேச சபைகளுக்குப் போட்டியிட்டவர்.

கொழும்பு ஹவ்லொக் பூங்காவில் நடைபெற்ற அன்னையர் முன்னணியின் மாபெரும் பொதுக் கூட்டத்திலும் இவருக்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டிருந்தது.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது பல தடவைகள் திரு சந்திரசேகரன் திருமதி பண்டாரநாயககாவைச் சந்தித்துப் பேசி வந்தார்

கொழும்பு கூட்டுப்படைத் தலைமையகக் குண்டு வெடிப்பு, அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா கொலையுண்ட குண்டு வெடிப்புச் சம்பவம் ஆகியவை தொடர்பாக அரசாங்கத்தின் மீது ஸ்ரீ.ல.சு. கட்சி குற்றஞ்சாட்டி வரும் இவ்வேளையில்—

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக ஸ்ரீ. ல சு. கட்சியுடன் நெருங்கிய பிரமுகர் ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பது அக்கட்சிக்கு சிங்கள மக்கள் மத்தியில் பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திரு சந்திரசேகரனுடன் மலையக மக்கள் முன்னணியின் உபதலைவர் டி. எச். தாமலிங்கம், செயலாளர் பி. எச். காதர் ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## மட்டுநகரை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி கொள்ளையர் குழு கொழும்பு நெல்சன் வீதியில் இடம்பெற்ற கொள்ளை, கொழும்பு பெற்றோல் நிலையக் கொள்ளை ஆகியவை உட்பட பல கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டிருந்தது என்பது இப்போது தெரிய வந்திருக்கிறது.

(உ-3)

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணரங்கில்: 11-02-1924

விண்ணரங்கில்: 08-07-1989

## நடிகமணி வி. வி. வைரமுத்து

உருகி உடல்கருகி உள்ளீரல் பற்றி
எரிய எமைநீத்த தேனோ — பெருமைசேர்
தந்தாய் நடிப்புலகம் தந்த தவக்கொழுந்தே
எந்தாய் எமக்கார் இனி.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(17258)

# மரண அறிவித்தல்கள்

## திரு. N. R. சின்னராசா

யாழ்ப்பாணம், இணுவில் மேற்கைச் சேர்ந்த இலங்கை-இந்திய-மலேசிய-சிங்கப்பூர் புகழ் 'லய ஞான திலகம்' தவில் வித்துவான் திரு. N. R. சின்னராசா அவர்கள் இறைபதம் எய்தினார்,

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

இணுவில் மேற்கு, கந்தசாமி கோவிலடி இணுவில். குடும்பத்தவர்

[17257]

## திரு. கந்தையா சிவானந்தன்

[இளைப்பாறிய கட்டடத் திணைக்கள இலிகிதர்]

கொழும்புத்துறை மேற்கைச் சேர்ந்த இளைப்பாறிய கட்டடத் திணைக்கள இலிகிதர் திரு. கந்தையா சிவானந்தன் அவர்கள் 7-7-1991 அன்று காலமானார்.

அன்னார் திருமதி சிவபாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும், வடிவாம்பிகை, சிவகாமசுந்தரி, சிறீகாந்தா [லிபியா], மகேஸ்வரி, யோகேஸ்வரி, சிவகுமார் [உதவித் தபால் அதிபர், வவுனியா], ஆனந்தகுமார் [கனடா], சூரியகுமார, தேவகுமார் [திசைவீரசிங்க, சோதிலிங்கம் அன் கம்பனி - கணக்குப் பதிவாளர்], சர்வலோகேஸ்வரி [ஆசிரியை, யா/துரையப்பா மகா வித்தியாலயம்] ஆகியோரின் அன்புத் தந்தையும், குணரெட்ணம் [ஓய்வுபெற்ற அதிபர்], இராஜேந்திரன், தேவசாந்தினி, சுந்தரலிங்கம், செல்வகுமாரன், சக்திதேவி [ஆசிரியை, முல்லைத்தீவு செம்மலை மகா வித்தியாலயம்], அம்பிகை [கனடா] ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 9-7-91 செவ்வாய்க்கிழமை மாலை 3 00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

92, கொழும்புத்துறை வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். மனைவி பிள்ளைகள்

(17259)

## வேலாயுதர் கார்த்திகேசு

சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. வேலாயுதர் கார்த்திகேசு 7-7 91 இல் மானிப்பாய் மெமோறியல் வீதியில் இருக்கும் இல்லத்தில் காலமானார்.

இவர் முத்துப்பிள்ளையின் அன்புக் கணவரும், கந்தசாமி, முத்துலிங்கம், அம்பிகாபதி [ஸ்ரீஅம்பாள் பங்காளர், வவுனியா], பாலசுப்பிரமணியம், கனகலிங்கம் [ஆசிரியர், வவுனியா] ஆகியோரின் அன்புத் தந்தையும். தியாகேஸ்வரி, சரஸ்வதி, தயாநிதி, தங்கராணி, நிர்மலா ஆகியோரின் மாமனாரும், முத்துவின் சகோதரரும், சுப்பிரமணியம், பொன்னம்பலம், திருமதி நாகராசா, திருமதி தம்பிஐயா, திருமதி பொன்னுத்துரை ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 8-7-91 திங்கட்கிழமை மானிப்பாயில் நடைபெறும். தயவுசெய்து இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

மானிப்பாய். கா. கந்தசாமி [மகன்]

(17262)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org